# திருநெல்வேலி மாநகராட்சி

## 28.10.2022 அன்று நடைபெற்ற சாதாரணக் கூட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள் விவரம்

---

### மாண்புமிகு மேயர் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள்

1. **தீர்மானம் எண்: 134**

அரசாணை (நிலை) எண்: 92 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கு (தேர்தல்) துறை, நாள்: 24.06.2022-ல் உள்ளாட்சி அமைப்புகளில் நகர்ப்புற உள்ளாட்சி நிர்வாகத்தை வலுப்படுத்தவும், நகர்ப்புற உள்ளாட்சி செயல்பாடுகளில் பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் திட்டம், வளர்ச்சிப் பணிகள் செயல்படுத்தவும், வார்டு குழு மற்றும் பகுதி சபா உருவாக்குவதற்கும், அதன் செயல்பாடுகளுக்கும் The Tamilnadu Urban Local Bodies (Ward Committee and Area Sabha) Rules-2022 ஏற்படுத்தப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

அதன்படி திருநெல்வேலி மாநகராட்சி பகுதியில் உள்ள 55 வார்டுகளிலும் மறு வரையறை செய்யப்பட்டு 226 பகுதி சபாக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி 226 சபாக்களுக்கும் உறுப்பினர்கள் நியமனத்திற்கான விண்ணப்பங்கள் உரிய படிவம்-1இல் பெறப்பட்டு மாநகராட்சி நிர்வாகத்தால் மேற்படி விண்ணப்பங்களின் தகுதி உறுதி செய்யப்பட்டதன் பேரில் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ள 226 நபர்களையும் சம்பந்தப்பட்ட வார்டுகளுக்கான வார்டு கமிட்டி உறுப்பினர்களாக நியமிப்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகின்றது. அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

2. **தீர்மானம் எண்: 135**

திருநெல்வேலி மாநகராட்சிக்குட்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தினந்தோறும் அவர்கள் விருப்பபடும் 2 தமிழ் நாளிதழ் மாநகராட்சி மூலம் வழங்கிடவும், அதற்கான செலவினத்திற்கும் அனுமதி அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

3. **தீர்மானம் எண்: 136**

திருநெல்வேலி மாநகராட்சி நான்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நபர்களின் பட்டியல் 2004ஆம் ஆண்டில் கணக்கெடுப்பு

மேற்கொள்ளப்பட்டதாகும். தற்போது முதியோர் ஓய்வூதியம் கோரி பல முதியோர்கள் விண்ணப்பிக்கும் நிலையில் அவர்களின் பெயர்கள் அப்பட்டியலில் இல்லாமல் ஓய்வூதியம் கிடைக்காமல் மிகுந்த சிரமம் அடைகின்றனர்.

எனவே, நாளது தேதியில் வசித்து வரும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள நபர்களின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அனுமதியுடன் புதிதாக கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளவும்,

தற்போது உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள பட்டியலை புதிய வார்டு வரையறையின் படி வார்டு எண் மாற்றம் செய்து அதனடிப்படையில் பட்டியல் தயார் செய்து அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு நகலினை வழங்கிடவும் மாமன்றம் அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## 4. தீர்மானம் எண்: 137

உலகத் தமிழனத்தின் ஒப்பற்றத் தலைவர், தன் வாழ்நாள் முழுவதும் தமிழர்களின் நலனுக்காகவும், தமிழ் மொழிக்காகவும் பாடுபட்ட தலைவர், தமிழ் மொழிக்கு செம்மொழி அந்தஸ்து பெற்று தந்த தலைவர். முறைந்தாலும் மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழ் அறிஞர், டாக்டர் கலைஞர் அவர்கள் முழு உருவ வெண்கல சிலையினை மாநகராட்சியின் மைய அலுவலக வளாகத்தினுள் அமைத்திட 27வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ச.உலகநாதன் மற்றும் திராவிட முன்னேற்ற கழகம் சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் சார்பாக மாண்புமிகு மேயரால் கொண்டு வரப்படும் தீர்மானம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## 5. தீர்மானம் எண்: 138

இம்மாநகராட்சியின் முக்கிய பணிகளில் ஒன்றான துாய்மைப் பணியினை மேற்கொள்ளும் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள விளிம்பு நிலை துாய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கில் தெற்கு மவுண்ட ரோட்டில் அவர்கள் குடியிருந்து வந்த குடிசை வீடுகளுக்கு பதிலாக மறைந்த முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில், நம் மண்ணின் மைந்தர் திரு.A.L.சுப்பிரமணியன் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் வைத்த கோரிக்கையினை ஏற்று 272 குடியிருப்புகள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக கட்டி முடிக்கப்பட்டு 2000ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டது.

அன்றைய காலத்தில் உள்ள மக்கள் தொகைக்கு அதுபோதுமானதாக இருந்தது. தற்போது 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியிருக்க தனி வீடின்றி ஒரே வீட்டில் அதிக நெருக்கடியில் வசிக்கும் சூழ்நிலையில் உள்ளது. தற்போது 27வது வார்டுக்குட்பட்ட தெற்கு மவுண்ட சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள மாநகராட்சிக்குட்பட்ட மாட்டுத்தொழுவம் எந்தவித பயன்பாடு இல்லாமலும் இருக்கிறது. அந்த இடத்தில் மாநகராட்சியின் நிதி ஆதாரத்தைக் கொண்டோ அல்லது தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாகவோ வீடுகள் இல்லாத துாய்மை பணியாளர்கள் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டி தருவதற்கு 27வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ச.உலகநாதன் சார்பாக மாண்புமிகு மேயரால் கொண்டு வரப்படும் தீர்மானம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## 6. தீர்மானம் எண்: 139

தற்போது மத்தியில் ஆளும் ஒன்றிய அரசானது அனைத்து விதமான மத்திய தேர்வாணைய தேர்வுகளிலும் ஹிந்தி மொழியினை கொண்டுவர முற்படுகிறது. ஒரு மொழி அழிந்தால் ஒரு இனமே அழிந்துவிடும். எனவே நமது கழகத்தின் கொள்கைகளில் முக்கிய கொள்கையான ஹிந்தி எதிர்ப்பு போராட்டத்தை கையில் எடுத்து நமது செம்மொழியாம் தமிழ் மொழியினை காத்திடும் வகையில் இம்மாமன்றம் வாயிலாக "ஹிந்தி எதிர்ப்பு தீர்மானம் " நிறைவேற்ற திராவிட முன்னேற்ற கழகத்தின் அனைத்து மாமன்ற உறுப்பினர் சார்பாக மாண்புமிகு மேயரால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் அனைத்து கட்சி மற்றும் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## 7. தீர்மானம் எண்: 140

மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்கள், தினந்தோறும் மாநகராட்சியில் பல்வேறு சேவை பெறுவதற்காக வரும் பொதுமக்கள் ஆகியோர் தேநீர் மற்றும் உணவு விடுதி அருகில் இல்லாமல் அதிக துாரம் செல்ல வேண்டியுள்ளது. இதனால் பணி நேரம் பாதிப்பதோடு பொதுமக்களும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். எனவே, பொதுமக்கள் மற்றும் பணியாளர்கள்நலன் கருதி மாநகராட்சி அலுவலக வளாகத்தில் "சிற்றுண்டி" அமைக்க 25வது வார்டு மாமன்ற உறுப்பனர் திரு.இராமகிருஷ்ணன் சார்பாக மாண்புமிகு மேயரால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

---

## சாதாரண கூட்ட பொருட்கள்

1. திருநெல்வேலி மாநகராட்சி திருநெல்வேலி மண்டல அலுவலகத்திற்குட்பட்ட பேட்டை பழைய பேட்டை இணைப்புச் சாலையில் அமைந்துள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை அரசாணை எண் 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 25-05-2009- ன்படி ஒவ்வொரு ஆண்டுற்கும் முந்தைய ஆண்டின் உரிமத் தொகையில் 5% உயர்வுடன் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு அனுபவிக்கும் வகைக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 07.10.2022 அன்று நிர்ணயிக்கப்பட்டது. மேற்படி ஏல / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பானது செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி மூலமாக 20.09.2022 அன்று தினகரன் நாளிதளில் விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நான்கு மண்டல அலுவலக அறிவிப்பு பலகையிலும் ஒட்டி சார்பு செய்யப்பட்டது. மேலும் மாநகராட்சியின் நான்கு மண்டலங்களிலும் உள்ள 20 உரிமதாரர்களுக்கு அனுப்பப்பட்டது. 07.10.2022 அன்று நடைபெற்ற பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம் கீழ்கண்ட விபரப்படி உள்ளது.

**ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் விபரம்**

(நிர்ணயம் செய்யப்பட்ட குறுமத்தொகை ரூ. 5,85,100 /-)

| வ. எ ண் | பெயர் மற்றும் முகவரி | வைப்புத் தொகை செலுத்திய விபரம் | சால்வன்சி மற்றும் கூடுதல் வைப்புத்தொகை செலுத்தப்பட்ட விபரம் | ஏல உச்ச கேள்வி தொகை |
|---|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.பி. மகாராஜா<br>த/பெ. எஸ்.பி. பாண்டியன்<br>(லேட்)<br>5/9- பெருமாள் வடக்கு ரதவீதி<br>திருநெல்வேலி ஜங்ஷன். | Rs. 1,28,000 /<br>City union Bank<br>D.D.No. 321419<br>Dated:<br>01.10.2022. | சால்வன்சி மதிப்பு<br>ரூ. 40,00,000 /-<br>Certificate No.<br>TN- 1720220502147<br>Dt. 12-05-2022 | ரூ.<br>7,10,750/- |
| 2. | திரு. S. மூக்கையா<br>77, சர்தார்புரம் கீழத் தெரு,<br>பழையபேட்டை | Rs. UCO Bank<br>1,28,000 /-<br>D.D.No263421<br>Dated:<br>04.10.2022. | சால்வன்சி மதிப்பு ரூ.<br>15,00,000 /-<br>Certificate No.<br>TN- 1720220818140<br>Dt. 06-09-2022 | ரூ.<br>7,10,800/- |

| | | | | |
|---|---|---|---|---|
| **3.** | திரு. S. சங்கர்<br>15A பட்டு பிள்ளையார் கோவில் தெரு,<br>பாளையங்கோட்டை. | Rs. 1,28,000 /<br>City union Bank<br>D.D.No. 321421<br>Dated:<br>01.10.2022. | Rs. 1,28,000 /<br>City union Bank<br>D.D.No. 321422<br>Dated:<br>01.10.2022. | 6,10,500/- |

**ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டவர்கள் விபரம்:**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | திரு. தே. மாரிமுத்து,<br>S/O S. தேவபிரான்,<br>20A/2 குறிச்சி மெயின் ரோடு,<br>குலவணிகர்புரம்,<br>பாளையங்கோட்டை | Rs. 1,28,000 /<br>City union Bank<br>D.D.No. 321420<br>Dated:<br>01.10.2020. | சால்வன்சி மதிப்பு ரூ. 5,00,000<br>Certificate No.<br>TN- 1720220922114<br>Dt. 29-09-2022 | ரூ. 6,86,300 /- |

மேற்காணும் விவரப்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி இரண்டையும் ஒப்பு நோக்கையில் , திரு. S. மூக்கையா என்பவரின் ரூ. 7,10,800/-ற்கான ஏலக்கேள்வி உச்ச ஏல கேள்வியாகும். இந்த உச்ச ஏல கேள்வியானது நிர்ணயிக்கப்பட்ட குறும தொகையினை விட 1,25,700/- கூடுதலாக உள்ளது. எனவே உச்ச ஏல கேள்வி தொகை ரூ. 7,10,800/- ஐ ஏற்று திரு. S. மூக்கையா என்பவருக்கு திருநெல்வேலி மண்டல அலுவலகத்தற்குட்பட்ட பேட்டை பழைய பேட்டை இணைப்புச்சாலையில் அமைந்துள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு வழங்க மாமன்றத்தின் பார்வைக்கும் , முடிவிற்கும்.

**அலுவலகக்குறிப்பு:**

**1.** மேலே பொருளில் காணும் விபரப்படி திருநெல்வேலி பேட்டை பழைய பேட்டை இணைப்பு சாலையில் அமைந்துள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தை திரு. S. மூக்கையா என்பவரின் உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ. 7,10,800/- (ரூ. ஏழு இலட்த்து பத்தாயிரத்து எண்ணூறு மட்டும்) னை ஏற்று ஒவ்வொரு ஆண்டிற்கும் முந்தைய ஆண்டின் உரிமத் தொகையில் **5%** உயர்வுடன் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டு காலத்திற்கு வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியத்தை முன்னிட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி உரிமதாரருக்கு உரிம ஆணை வழங்கப்பட்டதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**கோப்பு எண் அ1/405 /2022 (திலி வார்டு)**

**தீர்மானம் எண் : 141 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**2.** திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண்.52 ரவுண்டானாவில் இருந்து ரெட்டியார்பட்டி செல்லும் சாலையின் மேற்கு பக்கத்தில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு ரூ.98.00 இலட்சத்திற்கு மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி நாள் 07.09.2022—ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 26/2022-23ன் படி மாநில அளவில் Deccan Chronicle ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 08.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 27.09.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மின்னணு முறை அல்லாத இரு உறை முறையில் மெசர்ஸ்.R.R.Builders, மெசர்ஸ்.Peer Mohammed & Sons மற்றும் திரு.T.பாலசுப்பிரமணியன் ஆகிய மூன்று ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மெசர்ஸ்.R.R.Builders, மெசர்ஸ்.Peer Mohammed & Sons மற்றும் திரு.T.பாலசுப்பிரமணியன் ஆகிய மூன்று ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளி அட்டவணைகள் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-.

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | சதவீகிதம் % |
|---|---|---|---|---|---|
| 1 | மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண்.52 ரவுண்டானாவில் இருந்து ரெட்டியார்பட்டி செல்லும் சாலையின் மேற்கு பக்கத்தில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல | மெசர்ஸ். R.R.Builders | 96,42,165/- | 1,06,22,579/- | மதிப்பீட்டை விட 10.17% அதிகம் |
| 2 | | மெசர்ஸ். Peer Mohammed & Sons | | 1,03,38,065/- | மதிப்பீட்டை விட 7.22% அதிகம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | | திரு.T.பால சுப்பிரமணியன் | | 1,00,88,141/- | மதிப்பீட்டை விட 4.63% அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.T.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.1,00,88,141/- ஆனது மதிப்பீட்டை விட 4.63% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 07.10.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 10.10.2022-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 4.63% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 0.05% குறைவான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே, 12.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.T.பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.96,37,344/- ஆனது மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண்.52 ரவுண்டானாவில் இருந்து ரெட்டியார்பட்டி செல்லும் சாலையின் மேற்கு பக்கத்தில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணிக்கு 12.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திரு.T.பாலசுப்பிரமணியன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.96,37,344/- ஆனது மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதி வழங்கலாம்.

**(ஒ.பு.அ.எண். 26/2022-23)**

**தீர்மானம் எண் : 142 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**3.** திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தில் திரு.ஆர்.மேத்யூ என்பவரால் கடை எண் 94-ஐ பொது ஏலம் மூலம் குத்தகைக்கு எடுத்து நடத்தி வரப்பெற்றுள்ளது. அன்னார் கடந்த 06.05.2022 அன்று திடீர் உடல்நலக்குறைவால் காலமாகிவிட்டதால் அன்னாரது வாரிசுதாரரும், மனைவியுமாகிய திருமதி. ஜான்சி மாத்யு தனது கணவர் பெயரிலுள்ள கடை எண் 94-ஐ தன் பெயருக்கு மாற்றம் செய்யுமாறு கோரியுள்ளார்.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u>

திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலத்திற்குட்பட்ட பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகத்தில் திரு.ஆர்.மேத்யூ என்பவரால் கடை எண் 94-ஐ பொது ஏலம் மூலம் குத்தகைக்கு எடுத்து நடத்தி வரப்பெற்றுள்ளது. அன்னார் கடந்த 06.05.2022 அன்று திடீர் உடல்நலக்குறைவால் காலமாகிவிட்டதால் அன்னாரது வாரிசுதாரரும், மனைவியுமாகிய திருமதி. ஜான்சி மாத்யு என்பவர் பெயருக்கு அரசு ஆணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 3.7.2007-ன் பத்தி எண் 4 பிரிவு VI-ல் காணும் நிபந்தனைக்குட்பட்டு பெயர் மாற்றம் செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண்: அ1/2567/2022(மே.பா)**

**தீர்மானம் எண் :143 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

4. அரசாணை எண்: 78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 13.05.1998ன்படி திருநெல்வேலி மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 4 தொழில் நுட்ப உதவியாளர் பணியிடங்களும் நீண்ட காலமாக காலியாக உள்ளதாலும் செயல்திறன் பணியாளர் நிலை-1 பணியிடதத்தில் பணியாற்றி வரும் பணியாளர்களில் எவரும் டிப்ளமோ கல்வித்தகுதி இல்லாத நிலையில் தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வுக்கு தகுதி பெறவில்லை என்பதாலும் செயல்திறன் பணியாளர் நிலை-II ல் உள்ள தகுதி பெற்ற பணியாளர்கள் தங்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் பணியிடம் வழங்க கேட்டு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் மேற்படி பணியாளர்களை விதிகளை தளர்வு செய்து தொழில்நுட்ப உதவியாளர்களாக நியமனம் செய்ய ஆணை வழங்க கேட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு இவ்வலுவலக கடித எண் சி1/6329/2021 நாள் 28.12.2021-ன் வாயிலாக அனுப்பப்பட்டது இப்பொருள் தொடர்பாக மாமன்ற ஒப்புதல் பெற்று அனுப்பிட அரசு கடித எண் 13200/மாந5/2022-1 நாள் 25.07.2022ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் சார்நிலை பணிவிதிகள் 1996-ல் தொழில்நுட்ப உதவியாளர்கள் பணியிடத்தினை நிரப்புவதற்கான நியமன முறை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | Method of Recruitment | Qualification |
|---|---|---|
| **Technical Assistant** | i)By Direct Recruitment<br>ii) By promotion from the holders of the post of Skilled | **By Direct Recruitment**<br>(i) Must possess a Diploma in Engineering and<br>(ii) Must have passed the Department Test prescribed for the Corporation service before |

| | | |
|---|---|---|
| | Assistant Grade I | completion of probation.<br>**By Promotion** :<br>i) Must possess a Diploma in Engineering and<br>(ii) Must have worked for a period of not less than 5 years in different branches of the Engineering Department.. |

மேலும் இப்பணியிடத்தினை நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு மூலம் 1:2 என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் நிரப்பப்பட வேண்டும். இதன்படி இரண்டு பணியிடங்கள் நேரடி நியமனம் மூலமும் இரண்டு பணியாளர்களை பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டும். இதன்படி இரண்டு பணியாளர்கள் நேரடி நியமனம் மூலமும் இரண்டு பணியாளர்கள் பதவி உயர்வு மூலமும் நிரப்பப்பட வேண்டும்.

மேற்கண்ட பணிவிதிகளின்படி, தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்தினை செயல்திறன் பணியாளர் நிலை-1ல் உள்ள பணியாளர்களில் டிப்ளமோ கல்வித் தகுதி பெற்று (Diploma in Engineering) பொறியியல் துறையில் பல்வேறு பிரிவுகளில் 5 வருடங்களுக்கு குறையாமல் பணி முடித்தவர்களை மட்டுமே பதவி உயர்வு அளித்து பூர்த்தி செய்ய இயலும்.

தற்போது திருநெல்வேலி மாநகராட்சியில் செயல்திறன் பணியாளர் நிலை-1 பணியிடத்திற்கு அனுமதிக்கப்பட்ட 10 பணியிடங்களில் ஆறு பணியிடங்கள் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆறு பணியாளர்களும் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற தேவையான உரிய கல்வித் தகுதியினை பெற்றிருக்கவில்லை. இதில் ஒரு பணியாளர் திரு.எஸ்.செந்தில்ஆறுமுகம் செயல்திறன் பணியாளர் நிலை-1 என்பவர் தொழில்நுட்ப உதவியாளர் பதவியுயர்வு அளிக்க கேட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P.(MD) No. 15319/2014ன் மீது 08.12.2021ம் தேதிய தீர்ப்புரையில், மேற்படியாளருக்கு தொழில்நுட்ப உதவியாளர் பதவி உயர்வு வழங்க தெரிவிக்கப்பட்டதின்மீது மாமன்ற வழக்கறிஞரின் சட்டகருத்துரை கோரி நடவடிக்கையில் உள்ளது.

இந்நிலையில் செயல்திறன் பணியாளர் நிலை-2 ல் மொத்தம் அனுமதிக்கப்பட்ட 50 பணியிடங்களில் 14 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு பணியாற்றி வருகின்றனர். அவர்களில் முதுநிலையின்படி கீழ்க்கண்ட பணியாளர்கள் தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்குரிய கல்வித் தகுதியினை பெற்றுள்ளனர்.

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பதவி<br><br>திரு / திருமதி | செயல்திறன் பணியாளர் நிலை-2 பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாள் | கல்வித் தகுதி |
|---|---|---|---|
| 1 | 2 | 4 | 7 |
| 1 | திரு.முசம்மில் அகமது நூகு<br>செயல்திறன் பணியாளர் நிலை 2 | 30.04.2013 | Diploma in Electrical and Electronic Engineering |
| 2 | திரு.எம்.செல்வ ஜெகநாதன்<br>செயல்திறன் பணியாளர் நிலை 2 | 30.04.2013 | Diploma in Electrical and Electronic Engineering |
| 3 | திரு.எஸ்.எம்.அகமது இப்ராகிம்<br>செயல்திறன் பணியாளர் நிலை 2 | 30.04.2013 | Diploma in Mechanical Engineering |
| 4 | திரு.ஜி.மாரியப்பன் | 27.01.2014 | Diploma in Electrical and |

| | | | |
|---|---|---|---|
| | செயல்திறன் பணியாளர் நிலை 2 | | Electronic Engineering |

திருநெல்வேலி மாநகராட்சியில் சுமார் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் சீர்மிகு நகர திட்டப்பணிகளும் சுமார் ரூ.743 கோடி மதிப்பீட்டில் பாதாள சாக்கடை திட்டப் பணிகளும் சுமார் 295.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் திட்டப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்று வருகிறது. அரசாணையின்படி அனுமதிக்கப்பட்ட நான்கு தொழில்நுட்ப பணியிடங்களும் காலியாக உள்ளதால் திட்டப்பணிகள், பொறியியல் பிரிவு பணிகள் மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகிறது. எனவே மேற்படி தொழில்நுட்ப உதவியாளர் காலப்பணியிடங்களை பூர்த்தி செய்து இன்றியமையாததாகின்றது.

தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களின் அவசியத்தினை முன்னிட்டும், செயல்திறன் பணியாளர் நிலை-1 பணியிடத்திலிருந்து தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற உரிய கல்வித்தகுதி பெற்ற பணியாளர்கள் எவரும் இல்லை என்பதாலும், மேற்குறிப்பிட்டுள்ள செயல்திறன் பணியாளர் நிலை-2-ல் உள்ள பணியாளர்கள், தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கான உரிய கல்வித்தகுதி பெற்றுள்ளதனை கருத்தில் கொண்டும், பொறியியல் பிரிவில் சுமார் 8 வருடங்களுக்கும் மேலான பணி முடித்ததினை கருத்தில் கொண்டும் திருநெல்வேலி மாநகராட்சியில் காலியாக உள்ள தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களில் விதிகளை தளர்வு செய்து பதவியுயர்வு செய்வது குறித்து தக்க ஆணைகள் வழங்கிட அரசினை கேட்டுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு**

தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களில் அவசியத்தினை முன்னிட்டும், செயல்திறன் பணியாளர் நிலை-1 பணியிடத்திலிருந்து தொழில்நுட்ப உதவியாளர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற உரிய கல்வித்தகுதி பெற்ற பணியாளர்கள் எவரும் இல்லை என்பதாலும், செயல்திறன் பணியாளர் நிலை-2-ல் உள்ள பணியாளர்கள் தொழில்நுட்ப உதவியாளர் பணியிட பதவியுயர்விற்கு உரிய கல்வித்தகுதி பெற்றுள்ளதனை கருத்தில் கொண்டும், பொறியியல் பிரிவில் சுமார் 8 வருடங்களுக்கும் மேலான பணி முடித்ததினை கருத்தில் கொண்டும் விதிகளை தளர்வு செய்து திருநெல்வேலி மாநகராட்சியில் காலியாக உள்ள தொழில்நுட்ப உதவியாளர் பணியிடங்களில் பதவியுயர்வு செய்வது குறித்து தக்க ஆணைகள் வழங்கிட அரசினை கேட்டுக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

**சி1/6329/2021**

**தீர்மானம் எண் : 144 வார்டு எண்.53 மாமன்ற உறுப்பினர் திருமதி. மு.அம்பிகா அவர்கள் எதிர்ப்பு தெரிவித்து கடிதம் அளித்த நிலையில் ஏனைய மாமன்ற உறுப்பினர்களின் ஒருமித்த கருத்தோடு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

5. திருநெல்வேலி மாநகராட்சி பகுதிகளில் உள்ள அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களுக்கு 50% உயர்வுடன் சொத்துவரி பொது சீராய்வு 1-4-2022 முதல் மேற்கொள்ள அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை.28 அவர்களின் கடிதம்

ந.க.எண்.40032/ஆர்-1/2012 நாள்.03-08-2022 மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ஆ1/4101/2022(மை.அ)**

**தீர்மானம் எண் : 145 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

---

6. மாற்றுத்திறனாளியான திரு.M.மகாராஜன் என்பவர் தன் குடும்ப வறியநிலை கருதி பார்வதி தியேட்டர் அருகில் பெட்டிக்கடை அமைத்து வியாபாரம் செய்ய அனுமதி கோரி மாண்புமிகு மேயர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் நாள் மனு எண் 330 நாள் 27.09.2022ல் கொடுக்கப்பட்ட மனுவிற்கு பார்வதி சேஷன் மஹால் எதிரே உள்ள 100 சதுர அடி கொண்ட தற்காலிக கடை எண் 5ஜ 1.10.2022 முதல் மாதம் ரூ 2000/- வாடகைக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் அனுமதிக்கு

**அலுவலகக் குறிப்பு**

மேலே பொருளில் குறிப்பிடப்பட்ட விவரப்படி திரு.M.மகாராஜன் மாற்றுத்திறனாளி, பார்வதி தியேட்டர் எதிரில் பெட்டி கடை கேட்டு மாண்புமிகு மேயர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் நாள் மனு எண் 330 நாள் 27.09.2022ல் கொடுக்கப்பட்ட மனுவின்படி, பார்வதி சேஷன் மஹால் எதிரே உள்ள 100 சதுர அடி கொண்ட தற்காலிக கடை எண் 5ஜ 1.10.2022 முதல் மாதம் ரூ 2000/- வாடகைக்கு ஒதுக்கீடு செய்யவும், மாண்புமிகு மேயர் அவர்கள் முன் அனுமதி பெற்று மேற்படி கடை ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்: அ1 5491 2019**

**தீர்மானம் எண் : 146 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

7. திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டம்-2ன் கீழ் 3 பொதுக்கழிப்பிடங்கள், 4 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 4 சிறுநீர் கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண.5990/2022/SBM நாள் 11.04.2022ல் ரூ.215.36 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்படடுள்ளது. அதன்படி தச்சநல்லூர் மண்டலப் பகுதிக்குட்பட்ட கைலாசபுரம் வடக்கு பகுதியில சமுதாய கழிப்பிடம் அமைக்கும் பணிக்கு மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 27/ 2022-23-ன் படி 14.09.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் திரு.ஐ.கணபதி என்பவரிடம் இருந்து மட்டும் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது. அன்னாரது விலை அட்டவணையானது 14.09.2022-ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | திரு.ஐ.கணபதி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ் தச்சநல்லூர் மண்டலப் பகுதிக்குட்பட்ட கைலாசபுரம் வடக்கு பகுதியில் சமுதாய கழிப்பிடம் அமைத்தல். | ரூ. 24,43,688/- | ரூ. 24,43,552/- |
| | | | 0.01% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திரு.ஐ.கணபதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.01% (ஒப்பந்த மதிப்பு ரூ.24,43,552/-) குறைவாக உள்ளது. எனவே, 21.09.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுக் கூட்டத்தில், மேற்படி பணியானது தூய்மை இந்தியா இயக்கத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருப்பதாலும், அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 0.01% குறைவான விலைவிகிதத்தில் (ஒப்பந்த மதிப்பு ரூ.24,43,552/-) ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஐ.கணபதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வது குறித்து

மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்க திட்டத்தின் கீழ், தச்சநல்லூர் மண்டலப் பகுதிக்குட்பட்ட கைலாசபுரம் வடக்குப்பகுதியில் சமுதாயக்கழிப்பிடம் அமைக்கும் பணியினை ரூ.24.71 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு, 21.09.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கைகளின்படி, மூன்றாம் அழைப்பில் வரப்பெற்ற மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளி (ஒப்பந்த மதிப்பு ரூ.24,43,552/-) கொடுத்துள்ள திரு.ஐ.கணபதி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்ளலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி, மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொள்வதற்கு மாண்புமிகு மேயர் அவர்களால் முன் அனுமதி வழங்கப்பட்டமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
(மதிப்பீடு எண். 24/2022-23)

**தீர்மானம் எண் : 147 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

8. திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண்.12 உடையார்பட்டி சாலை தெரு ஸ்ரீ ரெங்கநாதபுரம் மாநகராட்சி தொடக்கப்பள்ளி வளாகத்தில் வடகிழக்கு பகுதியில் புதிதாக இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் அமைத்தல் பணிக்கு ரூ.54.50 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண.93 நாள் 24.08.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 26/2022-23ன் படி மாநில அளவில் Deccan Chronicle ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 08.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 27.09.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறை அல்லாத இரு உறை முறையில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியான திருமதி.K.அமராவதி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்று ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | சதவீகிதம் **%** |
|---|---|---|---|---|---|
| 1 | தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண்.12 உடையார்பட்டி சாலை தெரு ஸ்ரீ ரெங்கநாதபுரம் மாநகராட்சி தொடக்கப்பள்ளி வளாகத்தில் வடகிழக்கு பகுதியில் புதிதாக இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் அமைத்தல் | திருமதி. K.அமராவதி | 53,81,293/- | 53,78,837/- | மதிப்பீட்டை விட 0.05% குறைவு |

எனவே, 30.09.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திருமதி.K.அமராவதி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.53,78,837/- ஆனது மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண்.12 உடையார்பட்டி சாலை தெரு ஸ்ரீ ரெங்கநாதபுரம் மாநகராட்சி தொடக்கப்பள்ளி வளாகத்தில் வடகிழக்கு பகுதியில் புதிதாக இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் அமைத்தல் பணிக்கு 30.09.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் திருமதி.K.அமராவதி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.53,78,837/- ஆனது மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதி வழங்கலாம்.

**(ஒ.பு.அ.எண். 26/2022-23)**

## தீர்மானம் எண் : 148 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

**9.** **அ)** இம்மாநகராட்சி நான்கு மண்டல அலுவலகங்கள், சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளும் சுய உதவிக் குழுக்கள் மூலம் 645 நபர்கள் மாமன்ற தீர்மானம் எண். 112 நாள்: 29.10.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாமன்ற தீர்மான எண். 43 நாள்: 30.06..2022ன்படி மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 11.09.2022 தேதியுடன் முடிவடைவதால், மேற்படி பணியாளர்களின் பணியின் அவசியத்தை முன்னிட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி 41 சுய உதவிகுழுக்கள் மூலம் பணிபுரிந்து வரும் 653 நபர்களை 14.09.2022 முதல் 10.12.2022 வரை மேலும் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரிய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |

| | | | |
|---|---|---|---|
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிகுழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஶ்ரீஜெயம் சுகாதார பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஶ்ரீ போராட்சிஅம்மன் ஆண்கள் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஶ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஶ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ. அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமையன்பட்டி உரகிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| 16 | ஶ்ரீசெல்வ விநாயகர் சுகாதாரப்பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | ஶ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 18 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 20 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக் குழு | 18 | பாளை மண்டலம் |
| 21 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 22 | தளபதி ஓணடிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 23 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 24 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 25 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| 26 | ஸ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 27 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | மங்களஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | பாரதி ஆண்கள் சுய உதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | செந்தமிழ் மகளீர் சுய உதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப்பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 34 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | செம்மொழி சுய உதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் (12) |
| 37 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் (15) |
| 38 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப்பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 41. | ஸ்டார் சுகாதார பணிக் குழு | 8 | மேலப்பாளையம் மண்டலம் |
| | **மொத்தம்** | **653** | |

**ஆ)** மேலும் திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும் மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலச்சங்கங்களின் மேற்பார்வையாளரின் கீழ் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1.1.2018 முதல் ரத்து செய்யப் பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுய உதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக கீழ்க்கண்டுள்ள விபரப்படி, சுயஉதவிக் குழு பணியாளர்கள் மூலம் திடக்கழிவு

மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற தீர்மான எண். 13 நாள்: 28.03.2018-ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி சுய உதவிக்குழுக்களின் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண். | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர்களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வார்டு அலுவலகம் |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பாலாஜி பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 2 | வீரத்தாய் சுகாதார பணிக்குழு | 15 | பாளையங்கோட்டை மண்டலம் |
| 3 | பாரதம் சுகாதார பணிக்குழு | 16 | பாளையங்கோட்டை மண்டலம் |
| 4 | கொழும்பு முனியசாமி குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 5 | ஸ்ரீ வேம்படி மாயாண்டி குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 6 | விஷ்ணு துர்க்கை குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| | மொத்தம் | 100 | |

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண். 43, நாள்: 30.06.2022ன் படி 100 சுய உதவிக்குழு தூய்மைப் பணியாளர்களுக்கு அனுமதி காலம் 04.09.2022 -வுடன் முடிவடைவதால் மேலும் 07.09.2022 முதல் 03.12.2022 வரை 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந. க. எண். M3/15043/2022 நாள்: 28.06.2022 -ன் படி நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ஊதியம் ரூ.436/- என்பதன் அடிப்படையில் ஊதியம் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 ஐ பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.436/- என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண். 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி3) துறை, நாள்: 04-05-1998- ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார்

மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,68,67,200 ஆகும். சுய உதவிக் குழுக்களை பணியில் ஈடுபடுத்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ. 98,49,240/- ஆகும். மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 47 சுய உதவிக் குழுக்களை நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.436/- என மாவட்ட ஆட்சித் தலைவரின் செ.மு. ஆணை ந.க.எண். M3/15043/2022 நாள்: 28-06-2022-ன் படி வழங்கலாம். தின ஊதியம் அடிப்படையில் 753 (653+100) சுயஉதவிக்குழு தூய்மை பணியாளர்களுக்கு மாமன்ற தீர்மான எண்.43 நாள்: 30.06.2022 -ன்படி முறையே அனுமதி காலம் 16.06.2022 முதல் 11.09.2022 வரை மற்றும் 09.06.2022 முதல் 04.09.2022 உடன் முடியவுள்ள நிலையில் அ)வில் குறிப்பிட்டுள்ள 653 சுய உதவிக் குழு தூய்மை பணியாளர்களுக்கு 14.09.2022 முதல் 10.12.2022 வரை 88 நாட்களுக்கும் ஆ)வில் குறிப்பிட்டுள்ள 100 சுய உதவிக் குழு தூய்மை பணியாளர்களுக்கு 07.09.2022 முதல் 03.12.2022 வரை 88 நாட்களுக்கும் மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். M3/15043/2022 நாள்: 28.6.2022-ன் படி துாய்மை பணியாளர்களின் ஊதியம் ரூ.436/- என வழங்கவும் அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். மேலும் அவசர அவசியம் கருதி மாமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

**(H2/7560/2017)**

**தீர்மானம் எண் : 149 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

**10.** திருநெல்வேலி மாநகராட்சியில் ஜீலை, ஆகஸ்ட் 2022 ஆகிய மாதங்களில் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் தொடர்ச்சியாக கலந்து கொள்ளாத கீழ்காணும் மாமன்ற உறுப்பினர்களுக்கு “திருநெல்வேலி மாநராட்சிக்கு பொருந்தும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் **1981, பிரிவு 59(I)-ன்** படி தொடர்ச்சியான மூன்று கூட்டங்கில் கலந்து கொள்ளாத மாமன்ற உறுப்பினரை தகுதி நீக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது” என்ற விபரம் குறிப்பிட்டு அடுத்து நடக்கவிருக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ள தெரிவித்து இவ்வலுவலக கடிதம் ந.க.எண் **:** சி5/1483/2022 நாள்: 15.09.2022 மூலம் தெரிவிக்கப்பட்டு பதிவு தபால் மூலம் சம்மந்தப்பட்ட மாமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டது.

| வ.எண் | மாமன்ற உறுப்பினர்கள் பெயர் |
|---|---|
| 1. | திருமதி. முத்துலெட்சுமி<br>2 வது வார்டு மாமன்ற உறுப்பினர். |
| 2. | திரு. பூ. ஜெகநாதன்<br>30 வது வார்டு மாமன்ற உறுப்பினர். |
| 3. | திருமதி. அமுதா<br>31 வது வார்டு மாமன்ற உறுப்பினர். |

அதனை பெற்றுக் கொண்ட மேற்கண்ட மாமன்ற உறுப்பினர்களில், வரிசை எண் 3-ல் காணும் மாமன்ற உறுப்பினர் திருமதி.அமுதா அவர்கள் 21.09.2022ல் நடைபெற்ற மாமன்ற கூட்டத்தில் கலந்து கொண்டார். மற்ற இரு மாமன்ற உறுப்பினர்களான திருமதி.முத்துலெட்சுமி, திரு.பூ. ஜெகநாதன், ஆகிய இருவரும் 21.09.2022 ம் தேதிய மாமன்ற கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இதன் மூலம் மேற்படி இரண்டு மாமன்ற உறுப்பினர்களும் 29.07.2022, 24.08.2022, 21.09.2022 ஆகிய தேதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்ற மூன்று மாமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை.

திருநெல்வேலி மாநகராட்சிக்கு பொருந்தும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு59(l)-ன் படி

**59. Disqualification of Councillors – (1)** Subject to the provisions of section 62, a Councillor or a person referred to in clause (b) or (c) of subsection (2) of section 5 shall cease to hold office as such if he

.

.

.

**(l)** fails to attend the meetings of the council for a period of three consecutive months beginning from the date of the commencement of his term of office or of the last meeting he attended, or of his restoration to office as Councillor under sub section (4), as the case may be:

(4) In the case of a person who has ceased to be a Councillor in consequence of failure to attend meetings the matter shall be reported by the Commissioner to the Council at its next ordinary meeting and the Council may at that meeting restore such person to office.

| வ.எண் | மாமன்ற உறுப்பினர்கள் பெயர் |
|---|---|
| 1. | திருமதி. முத்துலெட்சுமி<br>2வது வார்டு மாமன்ற உறுப்பினர். |
| 2. | திரு. பூ. ஜெகநாதன்<br>30 வது வார்டு மாமன்ற உறுப்பினர். |

மேற்கண்ட மாநகராட்சி சட்டப்பரிவுகளின்படி மேற்குறிப்பிட்ட இரண்டு மாமன்ற உறுப்பினர்களும் தொடர்ந்து மூன்று மாமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை என்ற விவரம் மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

திருநெல்வேலி மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களான திருமதி.முத்துலெட்சுமி (வார்டு எண்.2) திரு.பூ.ஜெகநாதன்(வார்டு எண்.30), ஆகியோர் 29.07.2022, 24.08.2022, 21.09.2022 ஆகிய தேதிகளில் தொடர்ச்சியாக நடைபெற்ற மூன்று மாமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளாமையால், திருநெல்வேலி மாநகராட்சிக்கு பொருந்தும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 59(l) ன் படி தகுதிநீக்கம் ஆகின்றனர். மேற்காணும் சட்டப்பிரிவு 59(4)ன் படி மேற்குறிப்பிட்ட இரு மாமன்ற உறுப்பினர்களையும் மீளவும் மாமன்ற உறுப்பினர்களாக செயல்பட (Restore) அனுமதிப்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

**ந.க.எண்: சி5/1483/2022**

## தீர்மானம் எண் : 150 சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் 23981/2022 மற்றும் 24078/2022இல் வழங்கப்பட்ட உத்திரவின் அடிப்படையில் 21.11.2022 வரை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டது.

---

11. திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு அம்ரூத் (2016-17) திட்டத்தின் கீழ், பாதாள சாக்கடை திட்டம் (பகுதி-3) செயல்படுத்துவதற்கு அரசாணை நிலை எண்.5 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-2) நாள் 22.01.2018ன்படி ரூ.440.19 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதின் பேரில், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவை கழகம், சென்னை (TNUIFSL) மூலம் ரூ.440.19 கோடிக்கு மதிப்பிடப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கிக்கு பரிந்துரைக்கப்பட்டதில், விரிவான மதிப்பாய்வு செய்யப்பட்ட பின்னர் விலைக்குறைபாடுகள் (Physical and Price contingencies) காரணமாக ஆசிய வளர்ச்சி வங்கியின் விதிமுறைகள்படி ரூ.447.75 கோடிக்கு திட்ட மதிப்பீடு திருத்தப்பட்டு, இத்திட்டத்திற்கான நிதி இயலுமைத்தன்மை அறிக்கை (Finance Viability) தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைக் கழகம் (TNUIFSL) மூலம் கணக்கிடப்பட்டு கீழ்க்கண்டவாறு அம்ரூத் திட்டத்தின் கீழ் மத்திய அரசு மற்றும் மாநில அரசால் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

| | **Rs.in Crore** |
|---|---|
| 1.Contract Package Cost including GST @ 12% (Base Cost) | Rs. 360.71 |
| 2.Labour Welfare fund 1 % | Rs. 3.61 |

3.Physical Contingencies Rs. 18.04
4.Price Contingencies Rs. 29.86
5.Provisional items (Utility shifting, resettlement etc.) Rs. 35.53

-------------------
Total : Rs. 447.75
-------------------

-

மேற்படி பாதாள சாக்கடை திட்டம் (பகுதி-3) -க்கான திட்டப் பணிக்கு வேலை ஆணை வழங்கப்பட்டு பணிகள் 21.80% முடிக்கப்பட்ட நிலையில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர் பணியினை காலதாமதமாகவும் மற்றும் குறிப்பிட்ட பணியாளர்களை நியமித்து பணிகளை மேற்கொள்ளப்படாமல் இருந்தமையாலும் உரிய தடையின்மை சான்றினை ஆசிய மேம்பாட்டு வங்கியிடம் இருந்து தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைக் கழகம் மூலமாக பெறப்பட்டு பின்னர், மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியானது ரத்து செய்யப்பட்டு, மீதமுள்ள பணியினை மேற்கொள்வதற்கு ஏதுவாக 3 சிப்பங்களாக ரூ.627.67 கோடி மற்றும் ஏற்கனவே ஒப்பந்ததாரரால் செய்து முடிக்கப்பட்ட தொகை ரூ.36.25 கோடி ஆக மொத்தம் ரூ.663.92 கோடிக்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டப்பணியில் புதிதாக 41355 எண்ணம் குடியிருப்புகள் மற்றும் 2177 எண்ணம் வணிக பயன்பாட்டுக்கான இணைப்புகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைக் கழகம் (TNUIFSL) கடிதம் TNUDF/Projects/Tirunelveli UGSS Phase-III/Additional Funds நாள் 03.10.2022ம் தேதிய கடிதத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் (ADB assisted TNUFIP- T1) புதை வடிகால் திட்டம் பகுதி-3 ஐ செயல்படுத்த நிதி இயலுமை அறிக்கை (Finance Viability report) மற்றும் நிதி ஆதாரம் ஆகியவை கீழ்க்கண்டவாறு அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**A.** To avail **additional funds Under ADB assisted TNUFIP- T1) with the following means of Finance and Weighted average graded deposit and Tariff structure:**

| S.No. | Means of Finance | Amount (Rs. in Crore) | Percentage |
|---|---|---|---|
| 1 | Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under ADB assisted TNUFIP – T1) | 37.28 | 13.40% |
| | Additional Loan from Tamil Nadu Urban Development Fund (TNUDF) under ADB assisted TNUFIP – T1) | 51.65 | |
| 2 | Grant from Project Sustainability Grant Fund (PSGF) under ADB assisted TNUFIP – T1) | 92.30 | 33.16% |
| | Additional Grant from Project Sustainability Grant Fund (PSGF) under ADB assisted TNUFIP – T1) | 127.87 | |
| 3 | Grant from Government of India Under AMRUT | 190.93 | 28.76% |
| 4 | Grant from Government of Tamil Nadu under AMRUT | 76.37 | 11.50% |

| | | | |
|---|---|---|---|
| 5 | ULB Contribution | 66.40 | 10.00% |
| 6 | CGF Grant | 21.12 | 3.18% |
| | **Total** | **663.92** | |

| Plinth area of assessment in Sq.ft. | Proposed Deposit (Rs.) | | Proposed Tariff (Rs. per month) | |
|---|---|---|---|---|
| | Domestic | Non- Domestic | Domestic | Non- Domestic |
| <=600 | 7500 | 15000 | 100 | 300 |
| 601 - 1200 | 10000 | 20000 | 120 | 360 |
| 1201 -1800 | 12500 | 25000 | 140 | 420 |
| 1801 | 15000* | 30000* | 160* | 480* |
| **Wt.Average** | **9268** | **18537** | **114** | **342** |
| ***This is the base rate for the plinth are of 1801 sq.ft . The deposit and tariff for plinth area above 1801 sq.ft. shall be increased in proportion to the increase in plinth area.** | | | | |

2. To increase the amount of deposit and tariff at the rate of 10% every 5 years.

3. To meet the Interest during construction (IDC) from the General Fund of the Corporation.

4. To contribute an amount of Rs. 66.40 Crores, equivalent to 10% of the project cost as own contribution during the construction period.

5. To meet the deficit in O&M and debt service from general funds of the Corporation

6.To get necessary approval from competent authorities for sanction of Rs.21.12 Crores from CGF.

மேற்கண்ட விபரப்படி, ஆசிய வங்கி நிதியுதவியுடன் ADB assisted TNUFIP – T1) மூலம் பாதாள சாக்கடை திட்டம் பகுதி-3 ஐ செயல்படுத்துவதற்கு ஒப்புதல் பெறுவதற்கும், பரிந்துரை செய்வதற்கும், அரசின் நிர்வாக அனுமதி பெறுவதற்கும், இத்திட்டப்பணிக்கு கடன் உதவி பெறுவதற்கும் மற்றும் அதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை அனுப்பி வைப்பதற்கும் மாமன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:**

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கு அம்ரூத் (2016-17) திட்டத்தின் கீழ், பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் மண்டலப் பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் (பகுதி-3) ஐ ரூ.663.92 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கு மேற்குறிப்பிட்ட விபரப்படியான நிதி இயலுமை அறிக்கை (Finance Viability report) மற்றும் நிதி

**ஆதாரம் ஆகியவற்றை தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு மற்றும் நிதி சேவைக்கழகம், சென்னை அவர்களது 03.10.2022-ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட சிறப்பு நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை ஏற்று ஒப்புதல் வழங்கலாம்.**

**(ந.க.எண்.இ3/1378/2022)**

**தீர்மானம் எண் : 151 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

12. திருநெல்வேலி மாநகராட்சியில் 55 நாட்களுக்கு முற்றிலும் தற்காலிகமாக 300 எண்ணம் தூய்மை பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் வெளிக் கொணர்வு முறையில் (Outsourcing Basis) ஏற்பாடு செய்தல் பணிக்கு ரூ.100.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்.69 நாள் 29.07.2022–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 27/2022-23ன் படி மாநில அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 15.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மின்னணு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 03.10.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறை அல்லாத இரு உறை முறையில் மெசர்ஸ்.Jayaram Ventures மற்றும் மெசர்ஸ். M/s.Southern Solid Waste Management Service மற்றும் மெசர்ஸ்.M.S.G.Infra ஆகிய மூன்று நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. மேற்படி நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் 03.10.2022-ல் திறக்கப்பட்டு பரிசீலனை செய்யப்பட்டதில் மெசர்ஸ்.M.S.G.Infra நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால், ஒப்பநதப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கை நாள் 03.10.2022 ன்படி மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள ஒப்பந்தப்புள்ளிகளான மெசர்ஸ்.Jayaram Ventures மற்றும் மெசர்ஸ்.M/s.Southern Solid Waste Management Service ஆகிய நிறுவனங்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்தமையால் மேற்படி நிறுவனங்களின் விலை அட்டவணைகள் மட்டும் 07.10.2022-ம் தேதியன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:

| வ. எண். | பணியின் பெயர் | பணியின் ஒப்பந்த மதிப்பு | M/s.Southern Solid Waste Management நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு | M/s.Jayram Ventures நிறுவனத்தின் ஒப்பந்த மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சியில் 55 நாட்களுக்கு முற்றிலும் தற்காலிகமாக 300 எண்ணம் தூய்மை பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் வெளிக் கொணர்வு முறையில் (Outsourcing Basis) ஏற்பாடு செய்தல் | Rs.97,90,397/- | Rs. 1,01,72,580/- | Rs. 96,54,767/- |
| | **Tender Percentage** | | **3.90% மதிப்பீட்டை விட அதிகம்** | **1.39% மதிப்பீட்டை விட குறைவு** |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ்.Jayaram Ventures நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.96,54,767/- ஆனது மதிப்பீட்டை விட 1.39% குறைவாக உள்ளதால், 07.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.Jayaram Ventures நிறுவனத்தின் மதிப்பீட்டை விட 1.39% குறைவான (ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.96,54,767/-) ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் 55 நாட்களுக்கு முற்றிலும் தற்காலிகமாக 300 எண்ணம் தூய்மை பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் வெளிக் கொணர்வு முறையில் (Outsourcing Basis) ஏற்பாடு செய்தல் பணியினை மேற்கொள்வதற்கு 07.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.Jayaram Ventures நிறுவனத்தின் மதிப்பீட்டை விட 1.39% குறைவான (ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.96,54,767/-) ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ஒ.பு.அ.எண். 27/2022-23)**

**தீர்மானம் எண் : 152 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

13. திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண்:10 விஸ்வ வெண்பாநகர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம் ஆகிய பகுதிகளில் புதிதாக மின்விளக்கு அமைத்து கொடுக்கும்படி வசந்தநகர் பகுதி மக்கள்

பொதுநலச்சங்கம் மனு அளித்ததின் பேரில் மேற்படி பகுதியில் 09 எண்ணம் 20W LED மின் விளக்குகள் பொருத்தவும், மின்சார சேவை லைன் 10 எண்ணம் மற்றும் புதிதாக ஒரு மின்கம்பம் அமைக்க ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,57,130/- தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

**அலுவலக குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலம் வார்டு எண்:10 விஸ்வ வெண்பாநகர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம் ஆகிய பகுதிகளில் 09 எண்ணம் 20W LED மின் விளக்குகள் பொருத்தவும், மின்சார சேவை லைன் 10 எண்ணம் மற்றும் புதிதாக ஒரு மின்கம்பம் அமைக்க ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,57,130/- தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்:இ1-2708-2022**

## தீர்மானம் எண் : 153 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

---

14. திருநெல்வேலி மாநகராட்சியில் மூலதன மானிய நிதியின் கீழ் திருநெல்வேலி மாநகராட்சி இராமையன்பட்டி உரக்கிடங்கில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சேகராமாக்கும கழிவு நீர் தொடர்பான விபரங்களை தானியங்கி முறையில் பகுப்பாய்வு செய்து கண்காணிப்பு அமைப்புகளை நிறுவும் பணி மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.17021/2021/EA1/dated 04.03.2022ன்படி ரூ.41.72 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது, மேற்படி பணியின் மேற்கொள்வதற்கு ரூ..57.75 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாநகரப்பொறியாளர் அவர்களால் ரூ..57.75 இலட்சத்திற்கு 28.04.2022ல் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதின் படியும் மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்:05/2022-23ன் படி மாநில அளவில் தினமணி தமிழ் நாளிதழில் 10.05.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டுள்ளதின்படி, மேற்படி பணிக்கு முதல் அழைப்பாக 24.05.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் மின்னணு முறையில்லாத இரு உறை முறையில் 1. மெசர்ஸ்.R.L.Technologies Chennai மற்றும் 2. மெசர்ஸ்.Swaraj Equipment Pvt Ltd Chennai ஆகிய இரு நிறுவனங்களிடம் இருந்து ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் 06.06.2022-ம் தேதியன்று, மேற்படி ஒப்பந்தாரரின் தொழில் நுட்ப தகுதி தொடர்பான

ஒப்பந்தப்புள்ளி(Technical Bid) திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதி குறித்து கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் மெசர்ஸ்.Swaraj Equipment Pvt Ltd Chennai நிறுவனம் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்திசெய்யாததால் அன்னாரது ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. மேலும் மெசர்ஸ்.R.L.Technologies Chennai நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதினால் மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளி அட்டவணை மட்டும் 07.07.2022-ல் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-.

| வ. எண் | பணியின் பெயர் | துறையின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | மெசர்ஸ்.R.L.Technologies நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு | விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின்பு மெசர்ஸ்.R.L.Technologies நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு |
|---|---|---|---|---|
| 1 | திருநெல்வேலி மாநகராட்சி இராமையன்பட்டி உரக்கிடங்கில் உள்ளகழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சேகராமாகும் கழிவு நீர் தொடர்பான விபரங்களை தானியங்கி முறையில் பகுப்பாய்வு செய்து கண்காணிப்பு அமைப்புகளை நிறுவும் பணி | ரூ. 56,70,202/- | ரூ. 60,39,635/- | ரூ. 56,27,676/- |
| | | | 6.52% மதிப்பீட்டை விட அதிகம் | 0.75% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ளவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ். R.L.Technologies Chennai நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 6.52% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலை குறைப்பு பேச்சுவார்த்தைக்கு அழைக்க 15.07.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 22.07.2022-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலக விலைக்குறைப்பு பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று மேற்படி. நிறுவனம் ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 6.52% அதிகமான விலை விகிதத்திலிருந்து (ஒப்பந்த மதிப்பு ரூ.60,39,635/-குறைத்து தற்போது மதிப்பீட்டை விட 0.75% குறைவான விலைவிகிதத்தில் (ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.56,27,676/-) மேற்படி பணியை மேற்கொள்வதற்கு

சம்மதம் தெரிவித்தும், இதற்கு மேல் விலைக்குறைப்பு செய்ய இயலாது எனவும் தனது கடிதத்தில் இறுதியாகவும், முடிவாகவும் தெரிவித்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

எனவே,26.07.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில், மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியான மெசர்ஸ். R.L.Technologies Chennai நிறுவனத்தின் (ஒப்பந்தப்புள்ளி மதிப்பு .ரூ. 56,27,676/-)ஆனது மதிப்பீட்டை விட 0.75% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மெசர்ஸ். R.L.Technologies Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக் கொள்வது மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை ரூ.41.72 லட்சம் போக கூடுதலான செலவினம் ரூ.16.03 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

அ) பொருளில் கண்ட விபரப்படி திருநெல்வேலி மாநகராட்சி இராமையன்பட்டி உரக்கிடங்கில் உள்ளகழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சேகராமாகும் கழிவு நீர் தொடர்பான விபரங்களை தானியங்கி முறையில் பகுப்பாய்வு செய்து கண்காணிப்பு அமைப்புகளை நிறுவும் பணி மேலும், மேற்படி பணியானது அத்தியாவசியமான பணியாக இருப்பதாலும் 26.07.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ். R.L.Technologies Chennai (ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.56,27,676/-) ஆனது மதிப்பீட்டை விட 0.75% குறைவான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் எனவும் பரிந்துரை செய்துள்ளதின்படி மெசர்ஸ். R.L.Technologies Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வதற்கும் மற்றும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.41.72 இலட்சம் போக கூடுதலான செலவினம் ரூ.16.03 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**(ஒ.பு.அ.எண். 05 /2022-23)**

**தீர்மானம் எண் : 154 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

---

15. திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண்.44 ஆசாத் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் பணிக்கு ரூ.50.00 இலட்சத்திற்கு மாமன்ற தீர்மான எண்.63 நாள் 29.07.2022—ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படி மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 26/2022-23ன் படி மாநில அளவில் Deccan Chronicle ஆங்கில நாளிதழிலும், மாநில அளவில் தினத்தந்தி தமிழ் நாளிதழிலும் மற்றும் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் 08.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம்

செய்துள்ளதின்படி மின்னனு மற்றும் மூடி முத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 27.09.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மின்னனு முறை அல்லாத இரு உறை முறையில் மெசர்ஸ்.R.R.Builders மற்றும் மெசர்ஸ்.George Engineering Enterprises ஆகிய இரண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழுவால் தொழில் நுட்ப தகுதி தொடர்பான நிபந்தனைகளை கூர்ந்தாய்வு செய்ததில் மெசர்ஸ்.R.R.Builders மற்றும் மெசர்ஸ்.George Engineering Enterprises ஆகிய ஒப்பந்தக்காரர்களின் ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்பதகுதி தொடர்பான நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் மேற்குறிப்பிட்ட ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளி அட்டவணைகள் திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:-

| வ. எண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | சதவீகிதம் % |
|---|---|---|---|---|---|
| 1 | மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண்.44 ஆசாத் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் | மெசர்ஸ். R.R.Builders | 49,44,665/- | 54,40,107/- | மதிப்பீட்டை விட 10.02% அதிகம் |
| 2 | | மெசர்ஸ்.George Engineering Enterprises | | 57,33,069/- | மதிப்பீட்டை விட 15.94% அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ்.R.R.Builders ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.54,40,107/- ஆனது மதிப்பீட்டை விட 10.02% அதிகமாக உள்ளதால் இது ஏற்கதக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரை விலைகுறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்க 07.10.2022 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 10.10.2022-ம் தேதிய கடிதத்தில், இவ்வலுவலகத்திலிருந்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டதனை ஏற்று ஏற்கனவே ஒப்பந்தப்புள்ளியில் கொடுத்த மதிப்பீட்டை விட 10.02% அதிகமான விலைவிகிதத்திலிருந்து குறைத்து மதிப்பீட்டை விட 0.05% குறைவான விலைவிகிதத்தில் மேற்படி பணியை செய்ய ஒப்புக்கொண்டுள்ளார்.

எனவே, 12.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.R.R.Builders ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.49,42,193/- ஆனது மதிப்பீட்டை விட 0.05% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக் கொள்வது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

**அலுவலகக் குறிப்பு:**

திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம் வார்டு எண்.44 ஆசாத் மாநகராட்சி ஆரம்பப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் கட்டுதல் பணிக்கு 12.10.2022-ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மெசர்ஸ்.R.R.Builders ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.49,42,193/- ஆனது மதிப்பீட்டை விட 0.05% குறைவான

ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக் கொண்டு அனுமதி வழங்கலாம்.

**(ஒ.பு.அ.எண். 26/2022-23)**

**தீர்மானம் எண் : 155 அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**